ஸ்ரீ ஹரி :

பூஜ்யஸ்ரீ முரளீதர ஸ்வாமிகளின்

# மதுரமுரளி

தெய்வீக மாதப் பத்திரிகை



வேணு : 7 | ஜூன் 2002 | கானம் : 11

ஸ்ரீ ஹரி:

# பூஜ்யஸ்ரீ முரளீதர ஸ்வாமிகளின்

# மதுரமுரளி

(தெய்வீக மாதப் பத்திரிகை)

வேணு : 7 ஜூன் 2002 கானம் : 11

## விஷய ஸூசிகை


| | | பக்கம் |
|---|---|---|
| 1. | ஸ்ரீ ஸ்வாமிகளின் கீர்த்தனம் | 2 |
| 2. | மதுரமான மஹனீயர் - 79 | 3 |
| 3. | பக்தர்களின் கேள்விகளுக்கு ஸ்ரீ ஸ்வாமிகளின் பதில்கள் | 8 |
| 4. | வேத கதைகள் - 60 | 12 |
| 5. | எந்தரோ மஹானுபாவுலு - 50 | 14 |
| 7. | ஸனாதனப் புதிர் - பகுதி - 14 | 18 |
| 8. | தமிழக திருக்கோயில்களில் ஒரு கால பூஜை - 1 | 20 |
| 9. | பாலகர்களுக்கு ஒரு கதை - 54 | 22 |
| 10. | ப்ருந்தாவனமும், நந்தகுமாரனும் - 8 | 24 |
| 11. | ப்ரஹ்மோபதேசம் | 27 |
| 12. | ஸ்ரீ ஸ்வாமிகளின் ஸம்பாஷணைகளிலிருந்து - 81 | 31 |

ஸ்ரீ ஹரி:

# ஸ்ரீ ஸ்வாமிகளின் கீர்த்தனம்

ராகம் : நாட்டக்குறிஞ்சி தாளம் : ஆதி

*பல்லவி*

***ககனே ஸஞ்சர வானரம் த்யாயாமி (ககனே)***

*சரணங்கள்*

***ஸஞ்ஜீவினிபர்வத கதாதரம்***
***வாஞ்சிதபலப்ரதம் சிரஞ்ஜீவனம் (ககனே)***

***சஞ்சலபுச்சம் கிங்கிணிபூஷிதம்***
***ஜங்கம ஸர்வஜகந்மங்களவிக்ரஹம் (ககனே)***

***ஜிதேந்த்ரியம் மனோவேகம்***
***பாவரோமாஞ்சித பவனகுமாரம் (ககனே)***

***துஷ்டசிக்ஷகம் கஷ்டநிவாரகம்***
***ஶிஷ்டமுரளீதர இஷ்டஸ்வாமினம் (ககனே)***

*நாமாவளி*

***ஆஞ்சநேயா அனுமந்த வீரா***
***வாயு புத்ரா மாம் பாஹி (ஆஞ்சநேயா)***

## 79

ஸமீபத்தில் யஜ்ஞமணி தீக்ஷிதர் அவர்கள் செய்த வேள்விகாக ஸ்ரீ ஸ்வாமிகள் திருவையாறு சென்றிருந்தார்கள். நம் பாடசாலை வித்யார்த்திகள் சிலரும் உடன் சென்றிருந்தார்கள். சென்னையில் இருந்து கிளம்பி சீர்காழி சென்று அங்கு ஆகம பாடசாலையில் இரவு தங்கிவிட்டு மறுநாள் காலை நேராக மருத்துவகுடிக்குச் சென்றார்கள். அந்த கிராமத்தில் உள்ள அபிராமி அம்பிகா ஸமேத ஐராவதேஶ்வரர் ஆலய திருப்பணியை அந்த ஊரில் பிறந்த மும்பை ஸ்ரீ G.K. ராமமூர்த்தி அவர்கள் ஏற்று நடத்த முயற்சிகள் எடுத்து வருகின்றார். மிகவும் பெரிய புராதனமான கோயில் இது. கோயில் கவனிப்பாரின்றி மிகவும் பாழடைந்துள்ளது. இந்திரனுடைய யானையான ஐராவதத்திற்கு குஷ்டம் ஏற்பட்டு இந்த ஊரில் உள்ள சிவபெருமானை வழிபட்டு வியாதி நீங்கப் பெற்றதாக ஸ்தல புராணம். அதனாலேயே இந்த சிவபெருமானுக்கு ஐராவதேஶ்வரர் என்று பெயர். அதனாலேயே இந்த கிராமத்திற்கும் மருத்துவக்குடி என்ற பெயரும் வழங்கலாயிற்று.

இந்தக் கோயிலில், திருப்பணியின் முதல் கட்டமாக, மண்டியிருந்த புதர்கள், முட்செடிகளை எல்லாம் அகற்றி சுத்தம் செய்யப்பட்டது. ஸ்ரீ ஸ்வாமிகள், இதனை பார்வையிட்டு நேராக கும்பகோணத்தில் உள்ள அமரேந்திரபுரம் சென்று அங்கு நடைபெறும் திருப்பணி வேலைகளை பார்வையிட்டார்கள். அமரேந்திரபுரத்தில் சித்தியாகியுள்ள ஸ்ரீ ராமச்சந்த்ரதீர்த்தர் என்ற மாத்வ ஸ்வாமிகளைப் பற்றியும், அங்கு கோயில் கொண்டுள்ள ஸன்னிதானங்களைப் பற்றியும் ஏற்கனவே மதுரமுரளியில் வெளிவந்துள்ளது.

ஜுன் மாதம் 27-ந் தேதி இந்த ஆலயங்களுக்கு ஸம்ப்ரோக்ஷணம் நடைபெற உள்ளது. பிறகு அங்கிருந்து கிளம்பி

கோவிந்தபுரம் சென்று சிறிது நேரம் குருநாதரின் அதிஷ்டானத்தில் அமர்ந்து ஸ்ரீ ஸ்வாமிகள் ராமநாம ஜபம் செய்தார்கள். பாடசாலை குழந்தைகள் அனைவரும் உபநிஷத் பாராயணம் செய்தார்கள். பிறகு அங்கிருந்து கிளம்பி கணபதி அக்ரஹாரத்தில் உள்ள மஹாகணபதியை தர்சனம் செய்து மஹாகணபதிக்கு ஸஹஸ்ரதேங்காய் உடைத்துவிட்டு திருவையாறு யஜ்ஞசாலையான புண்யநிகேதனத்திற்கு வந்தார்கள்.

முசிறி தீக்ஷிதரின் புதல்வரான திருவையாறு ப்ரஹ்மஸ்ரீ ஸுந்தரேச ஶர்மா தன்னுடைய பெருமுயற்சியால் இந்த புண்ய நிகேதனத்தை நிர்மாணித்துள்ளார்கள். இந்த காலகட்டத்திலும் கூட ஒருவர் 100 சதவிகிதம் ஆசாரமாக ஒரு ஸ்மார்த்த ஶ்ரௌத கார்யத்தை அனுஷ்டிக்க ஆசைப்பட்டால் அதற்கு பாரத தேசத்திலேயே தகுந்த ஒரு இடம் புண்யநிகேதனம்தான். ஸ்ரீ ஸ்வாமிகள், அங்கு யஜ்ஞாரம்பம் வரை இருந்துவிட்டு அங்கிருந்து கிளம்பி அந்த ஊரில் உள்ள பாடசாலைகளுக்கெல்லாம் சென்றுவிட்டு நேராக தியாகப்ரம்மம் அதிஷ்டானத்தைத் தர்சனம் செய்து அங்கு சிறிது நேரம் தாரக மந்திரத்தை அமர்ந்து ஜபம் செய்தார்கள்.

சென்னை திரும்பி வரும் வழியில் மீன்சுருட்டி ஸமீபத்தில் மேட்டூர் ஸ்வாமிகளை சந்தித்தார்கள். இவருடைய பூர்வாஶ்ரம பெயர் ராஜகோபால் என்பது. இவர் நன்றாகப் படித்திருந்தவர் ஸ்ரீ மஹாபெரியவாள் பீடாதிபத்யத்தைத் துறந்து ஸ்வதந்த்ரமாக ஸஞ்சாரம் செய்ய ஆரம்பித்த காலத்தில், இவரும் தான் பார்த்துக்கொண்டிருந்த உயர்ந்த உத்யோகத்தைத் த்யாகம் செய்து ஸ்ரீ மஹாபெரியவாளைப் பின் தொடர்ந்தார். ஸ்ரீ மஹா பெரியவாளுடன்கூட இருந்தபொழுது இவர் ப்ரஹ்மசாரி ஆஶ்ரமத்தில் இருந்தபோதிலும் கடுமையான ஆகார நியமங்களையும் ஸாதனைகளையும் மேற்கொண்டார். ஸ்ரீ மஹாபெரியவாளிடம் அசஞ்சலமான குருபக்தி கொண்டவர்.

1989-ல் ஸ்ரீ மஹாபெரியவாள் நேரடியாக இவருக்கும், தியாகு என்ற பூர்வாச்ரம பெயர் கொண்ட கோவளைக்கால் என்ற ஊரைச் சேர்ந்த ஒருவருக்கும் ஸந்யாஸம் கொடுத்தார்கள். அப்பொழுது நம் ஸ்வாமிகளுக்கு ஏற்பட்ட ஒரு அனுபவத்தை இங்கு சொல்லித்தான்

ஆக வேண்டும். அப்பொழுது நம் ஸ்வாமிகள் சென்னை, மேலமாம்பலத்தில் ஒரு இடத்தில் தங்கியிருந்தார்கள். ஒருநாள் விடியற்காலையில் நம் ஸ்வாமிகள் தியானம் செய்து கொண்டிருக்கும் பொழுது ஒரு அனுபவம். தியானத்தில் மஹாபெரியவாளின் முன்பு, பூர்வாச்ரமத்தில் ராஜகோபால் என்ற பெயர் கொண்ட மேட்டூர் ஸ்வாமிகள் நமஸ்கரிக்கின்றார்கள், அவருக்கும் ஸ்ரீ மஹாபெரியவாள் காவி வஸ்த்ரத்தை கொடுக்கிறார்கள். பூர்வாஸ்ரமத்தில் தியாகு என்ற பெயர் கொண்ட கோவளைக்கால் ஸ்வாமிகள் நமஸ்கரிக்கிறார்கள். அவருக்கு மஹாபெரியவாள் காவி வஸ்த்ரத்தை கொடுக்கின்றார்கள். அதை அடுத்து மூன்றாவதாக நம் ஸ்வாமிகள் நமஸ்கரிக்கிறார்கள். காஷாய வஸ்த்ரத்தை கொடுக்க வந்த ஸ்ரீ மஹாபெரியவாள், ‘‘உனக்கு வேறு கார்யம் இருக்கு’’ என்று சிரித்துக்கொண்டே அந்த வஸ்த்ரத்தைத் தன் மடியிலேயே வைத்துக்கொண்டு விடுகிறார்கள்.

ஸ்ரீ ஸ்வாமிகளுக்கு இந்த உலகத்தில் ஆற்ற வேண்டிய பணிகள் பல இருப்பதை காண்பித்த இந்தக் காட்சி கிடைத்த மறுநாள், கங்காமாமி என்று ஒரு மாமி நம் ஸ்வாமிகளை பார்க்க வந்தார். இந்த மாமி ஸ்ரீ மஹாபெரியவாளிடமும், காமகோடி பீடாதிபதிகளிடமும் ஆழ்ந்த பக்திகொண்டவர்கள். அப்பொழுது அந்த மாமி, ‘‘நேற்று பெரியவாளைப் பார்க்கப் போயிருந்தேன். மேட்டூர் ராஜகோபால் அவர்களுக்கும், கோவளைக்கால் தியாகு அவர்களுக்கும் நேற்று காலையில் ஸ்ரீ மஹாபெரியவாள் நேரிடையாகவே ஸன்யாஸம் கொடுத்தார்கள்’’ என்ற செய்தியைத் தெரிவித்தார். நம் ஸ்வாமிகளுக்கு அதே நேரத்தில் த்யானத்தில் தனக்கு அந்தக் காட்சி ஏற்பட்டதை நினைத்து ஆச்சர்யமடைந்தார்கள்.

அந்த மேட்டூர் ஸ்வாமிகளைத்தான் இப்பொழுது மீன்சுருட்டியில் நம் ஸ்வாமிகள் சந்தித்தார்கள். இந்த அக்னிநட்சத்திர வெயிலிலும் தனியாக அவர் நடந்து செல்வதைப் பார்த்து நம் ஸ்வாமிகளுக்கு மனது உருகிவிட்டது. அவர் பல வருடங்களாக அன்னபிக்ஷையே எடுத்துக் கொள்வதில்லை. (அன்னமே சாப்பிடுவதில்லை) பாலும், பழமும்தான் சிறிதளவு எடுத்துக் கொள்கின்றார்கள். ஸ்ரீ மஹாபெரியவாள் ஸித்தியான பிறகு பாதயாத்திரையாகவே பாரததேசம் முழுவதும்

தனியாக யாத்திரை செய்து சென்ற மாதத்தில் காஞ்சிபுரம் வந்திருந்து ஸ்ரீ மஹா பெரியவாளின் அதிஷ்டானத்தை தர்சனம் செய்துவிட்டு இப்பொழுது ராமேஸ்வர யாத்திரை மேற்கொண்டுள்ளார்கள். பணத்தைக் கையால் தொடுவதில்லை. நவீன வசதிகள் எதையும் பயன்படுத்துவதில்லை. நடந்தேதான் எங்கும் செல்கின்றார். லௌகீகமான பேச்சுகளிலோ விஷயங்களிலோ ஈடுபடுவதில்லை. சீதம், உஷ்ணம் எதையும் பாராட்டுவதில்லை. உண்மையான யதி தர்மத்தின் அடையாளமாக திகழ்கின்றார்கள். அவருடன் பாடசாலை குழந்தைகளை அழைத்துக் கொண்டு நம் ஸ்வாமிகளும் சிறிது தூரம் நடந்து சென்றார்கள். அந்த சிறிது நேரமும் அவர், ஸ்ரீ மஹாபெரியவாளை பற்றியே பேசினது அவருடைய ஆச்சர்யமான குரு பக்தியை காண்பிக்கின்றது. இன்றும் இத்தகைய உண்மையான துறவிகள் வாழ்வது பாரத தேசத்தின் பாக்யமே. பிறகு, நம் ஸ்வாமிகள் அங்கிருந்து கிளம்பி சென்னை திரும்பினார்கள்.

(தொடரும்)

**— ஜயந்தி ஜானகிராமன்**

---

ஸ்ரீ ஹரி:

*ப்ராதஸ்திஷ்ட தலே தலே விடபினாம் க்ராமேஷு பிக்ஷாமட*
*ஸ்வச்சந்தம் பிப யாமுனம் ஜலமலம் சீராணி கந்தாம் குரு ।*
*ஸம்மானம் கலய அதிகோரகரலம் நீசாபமானம் ஸுதாம்*
*ஸ்ரீராதாமுரளீதரௌ பஜ ஸதா ப்ருந்தாவனம் மா த்யஜ ॥*

ப்ருந்தாவனத்திலுள்ள மரத்தடிகளில் வாஸம் செய்துகொண்டும், ப்ருந்தாவனத்தின் எல்லையிலுள்ள க்ராமங்களில் அலைந்து பிக்ஷை எடுத்துக்கொண்டும், ப்ரேம நதியான யமுனையின் ஜலத்தை இஷ்டம் போல் பருகிக்கொண்டும், நைந்த கந்தல் வஸ்த்ரங்களையே அணிந்துகொண்டும், யாராவது உன்னை புகழ்ந்தால் அதை கோரமான விஷமென்று கருதியும், யாரேனும் அவமானம் செய்தால், அதை அம்ருதம் போல் ஸந்தோஷமாக ஏற்றுக்கொண்டும், ஸ்ரீராதாமுரளீதர யுகளத்தை ஸதா பஜித்துக்கொண்டும், ஒரு க்ஷணம் கூட ப்ருந்தாவனத்தை விட்டு விலகாமலும் இரு!

# ஆத்மநிவேதனம்

ஸ்ரீ ஸ்ரீ க்ருஷ்ணப்ரேமி ஸ்வாமிகள் திருவேங்கடமுடையானைக் குறித்து ''ஆத்மநிவேதனம்'' என்ற ஒரு ஸ்தோத்திரத்தைச் செய்துள்ளார்கள். ஒரு பக்தன் தன் ஹ்ருதயத்தைவிட்டு பெருமாளிடம் அலறுவதற்கு இன்றியமையாத ஸ்தோத்திரம்.

திருவொற்றியூரில் ஸ்ரீ தியாகராஜ ஐயர் என்ற ஒரு பக்தர் இருந்தார். அவர் திருப்பதி ஸ்ரீநிவாஸனிடமும், ஸ்ரீக்ருஷ்ணப்ரேமி ஸ்வாமிகளிடமும் மிகுந்த பக்தியுடையவர். அவர் தண்டையார்-பேட்டையில் ஒரு வங்கியில் கேஷியராகப் பணிபுரிந்து வந்தார். அவர் தினமும் ஆத்மநிவேதனம் பாராயணம் செய்து வந்தார். ஒரு நாள் இரவு 12 மணிக்கு வேலைகளை எல்லாம் முடித்துவிட்டு தனக்கும் மற்ற சில ஊழியர்களுக்கும் சம்பளப் பணத்தை எடுத்துக்கொண்டு தன்னந்தனியே தண்டையார்பேட்டையிலிருந்து திருவொற்றியூருக்கு சைக்கிளில் வந்துகொண்டிருந்தார். ஆத்மநிவேதனத்தை சொல்லிக்கொண்டே வந்துகொண்டிருந்தார்.

திடீரென, மோட்டார் சைக்கிளில் வந்த இரு திருடர்கள் அவரை கத்தியைக் காட்டி மிரட்டி பணத்தைப் பிடுங்கிக்கொண்டு ஓடிவிட்டனர். தியாகராஜ ஐயர் உயிர் தப்பித்ததே பகவத் க்ருபை என்று நினைத்து அப்படியே சாலையில் சோர்ந்து உட்கார்ந்துவிட்டார். பயத்தினால் படபடப்பு அடைந்த அவர் மேலும் சைக்கிளில் செல்ல இயலாதவராய் அங்கேயே உட்கார்ந்திருந்தார். ஆனால், ஆத்மநிவேதனத்தை மட்டும் சொல்லிக்கொண்டே இருந்தார். சிறிது நேரத்தில், ஓடிச் சென்ற திருடர்கள் மோட்டார் சைக்கிளில் திரும்பி வந்து பணத்தை அவர் கையில் கொடுத்து ஆஶ்வாசப்படுத்தி வீட்டின் ஸமீபம் வரை கொண்டு விட்டு விடைபெற்றுச் சென்றனர்.

திருடர்களின் திடீர் மாறுதலுக்கு ஸ்ரீநிவாஸனின் கருணையே காரணம் என்று ஸ்ரீ தியாகராஜ ஐயர் திடமாக நம்பினார்.

# பக்தர்களின் கேள்விகளுக்கு ஸ்ரீ ஸ்வாமிகளின் பதில்கள்

*கேள்வி : ராமர் ஏறக்குறைய 11,000 வருடங்கள் வாழ்ந்ததாக ராமாயணத்தில் கூறப்பட்டிருந்தாலும் அவரது சரித்திரத்தில் 14 வருடம் மட்டுமே ப்ரதானமாக பேசப்பட்டிருப்பது ஏன்?*

பதில் : ராமாவதாரத்தில் வாழ்க்கையில் சிரமங்கள் ஏற்படும்பொழுதும், ராமன் தன் குணங்களில் இருந்து வழுவாமல் இருக்கின்றான். வசிஷ்டர், பரதன், லக்ஷ்மணன் மற்றும் தந்தையான தசரதரும் கூட ராஜ்யத்தை எடுத்துக்கொள்ளும்படி திரும்பத் திரும்ப கூறும்பொழுதும், ராமன் ராஜ்யத்தை ஏற்றுக்கொள்ளத் தயாராக இல்லை. இந்த இடத்தில் ராமருடைய குணங்களையே நாம் பார்க்கின்றோம்.

அயோத்தியை விட்டுச் செல்லும்பொழுது, அயோத்தி ஜனங்கள் அனைவரும் ராமன் மேல் தீராத பக்தி கொண்டிருந்த வேளையில், ''நீங்கள் என்மேல் எத்தகு பக்தி, விஶ்வாஸத்துடன் இருக்கின்றீர்களோ, அதே விசுவாசத்தை பரதனிடமும் காண்பிக்க வேண்டும்'' என்று கூறிய ராமரின் குணம்; பரதன் வந்து ராஜ்யத்தைக் கொடுக்கும்பொழுது, ''நீ போய் 14 வருடம் ராஜ்யத்தில் இரு'' என்று திருப்பி அனுப்பிய அவரது குணம்; வாலியை ஜெயித்து சுக்ரீவனுக்கு ராஜ்யத்தைக் கொடுத்தபின், ''நீ இவ்வளவு காலம் எவ்வித சுகமும் இன்றி இருந்தாயே. எனவே 6 மாதம் சௌக்யமாக ராஜ்யத்தில் இரு. பிறகு சென்று சீதையைத் தேடலாம்'' என்று கூறிய அவரது குணம்; விபீஷணனுக்கு பட்டாபிஷேகம் செய்தபின், ''இப்பொழுது விபீஷணன் ராஜாவாகிவிட்டதால் அவரிடம் அனுமதி பெற்று, சீதையை அசோகவனத்திலிருந்து அழைத்து வா'' என்று கூறிய அவரது குணம்; ஸ்ரீலங்காவில் ஐஶ்வர்யங்கள் மண்டிக் கிடப்பதைக் கண்டபின், ''நாம்தானே விபீஷணனுக்கு ராஜ்யத்தை ஜெயித்துக்கொடுத்தோம். எனவே, நமக்கும் இதில் பங்கு உண்டு. இந்த சொத்தில் ஒரு பகுதியை நாம் அயோத்திக்கு எடுத்துச் செல்வோம்'' என்று ராமர் நினைக்காமல், அங்கு ஸ்நானம் கூட செய்யாமல் கிளம்பிச் சென்ற அவரது பாங்கு; துக்கத்திலும் அவர்

எவ்வாறு தர்மத்திலிருந்தும், குணங்களிலிருந்தும் வழுவாமல் இருக்கிறார் என்பதைக் காண்பிக்கவே நாம் 14 வருட சரித்திரத்தை ப்ரதானமாக எடுத்துக்கொள்கிறோம். சிரமங்கள் வந்தபொழுதும், ஹரிச்சந்திரன் ஸத்யஸந்தனாக, ஸத்யத்தைக் காப்பாற்றினான் என்பதுதான் ஆச்சரியமே தவிர, ராஜாவாக சௌக்யத்துடன் இருக்கும்பொழுது அவன் ஸத்யஸந்தனாக இருந்தான் என்பதில் எவ்வித ஆச்சர்யமும் இல்லை.

வாழ்க்கையில் ஒருவனுக்கு சிரமங்கள் வரும்பொழுதுதான் அவனுடைய உண்மையான ஸ்வரூபம் வெளிப்படும். ராமன் 14 வருடங்கள் வனவாஸத்தின்பொழுது பல்வேறு சிரமங்களை சந்திக்க நேர்ந்தாலும் தன் குணங்களிலிருந்து சிறிதும் வழுவாமல் இருந்தார் என்றால், அவர் தம் 11,000 வருட வாழ்நாளில் குணவானாக இருந்தாரா என்ற கேள்விக்கே இடமில்லை. ஆகவே, அவர் வனவாஸம் இருந்த அந்த 14 வருடங்களே ப்ரதானமாக பேசப்படுகிறது.

*கேள்வி : இன்று பல வேதபாடசாலைகள் தோன்றியிருப்பது ஒரு ஆரோக்யமான சூழ்நிலைதானா?*

பதில் : சென்ற தலைமுறையில் நாம் வேதபாடசாலை விஷயத்திலும், கோவில்கள் விஷயத்திலும் அசிரத்தையாக இருந்துவிட்டோம். நீங்கள் சொல்வது போலவே இப்பொழுது சற்று எல்லோருக்கும் ஒரு விழிப்புணர்வு ஏற்பட்டிருக்கின்றது. அதன் காரணமாகவே இப்பொழுது வேதபாடசாலைகள் நடத்தும் விஷயத்தில் பலருக்கு ஆர்வம் இருப்பதைக் காண்கிறோம். இன்று பல வேதபாடசாலைகள் நடக்கின்றன. சென்ற தலைமுறையில் குறைந்த எண்ணிக்கையிலேயே பாடசாலைகள் இருந்தபோதிலும், அங்கு தயாரான வித்வான்களுடைய தரம் இப்பொழுதுள்ள பாடசாலைகளில் உள்ள வித்யார்த்திகளிடம் இருக்குமா என்ற ஒரு கேள்விக்குறி இருந்தாலும், வேதபாடசாலைகள் நடத்த முன்வருவதும், வித்யார்த்திகள் சேர்வதும் ஒரு ஆரோக்யமான சூழ்நிலையே!

இதற்கு மற்றொரு கோணமும் இருக்கின்றது. அதிகமான அளவில் வேதவிற்பன்னர்கள் ஒரு காலத்தில் தயாரானால், அவர்களது தேவையென்பது தயாரான வித்வான்களின் எண்ணிக்கையைக் காட்டிலும் குறைவாகவே இருக்கும். வேதத்தை இன்று அநேகமாக

எல்லோரும் ஜீவன உபாயமாகவே படிக்கின்றார்கள். இவர்களை ரக்ஷிக்க ராஜாங்கமும் எந்த ஸமூஹமும் இன்று முன்வரவில்லை. இப்படியிருக்கும்பொழுது, அதிக அளவில் வேதவிற்பன்னர்கள் தயாரானால், பல வேதவித்வான்களுக்கு வருமானமில்லாத சூழ்நிலை ஏற்படும்.

வேதம் படிப்பதற்கு தன் வாழ்வில் 10 - 15 வருடங்களை அவர்கள் செலவழித்துவிடுவதால் அவர்களுக்கு வேறெதுவும் தெரியாமல் போய்விடும். அவர்களால் வேறெந்த தொழிலும் செய்ய முடியாது. அப்படி வேதம் படித்த பலர் சிரமப்படக்கூடிய ஒரு சூழ்நிலையைப் பார்த்தால், அவர்களுடைய ஸந்ததியினரிடமும், அடுத்த தலைமுறையிடமும் வேதம் படிக்க வருவதற்கு நிச்சயமாக ஒரு தயக்கம் ஏற்படும்.

ஆகவே, எப்பொழுதும், எந்த அளவுக்கு நமக்கு வேதவித்வான்கள் தேவையோ அதைக் காட்டிலும் சற்று குறைவாகவே அவர்களது எண்ணிக்கை இருந்தால், அவர்களுக்கு நல்ல வரவேற்பு இருக்கும். அவர்களை நன்றாக அழைத்து கௌரவப்படுத்துவார்கள். அவர்களுக்கு நல்ல வருமானமும் இருக்கும். அதன் தொடர்ச்சியாக அடுத்த தலைமுறையும் தைரியமாக வேதம் படிக்க வருவார்கள். இந்த கோணத்திலிருந்து பார்த்தால், நன்றாக, முழுவதுமாக, ஸந்தேகம் சிறிதுமின்றி, சற்றும் பிழையில்லாமல் வேதத்தை அப்யாஸம் செய்த தரமான வேதவித்வான்கள் குறைந்த அளவில் தயாரானாலும் கூட போதுமானதாகும். இதுவே, ஒரு ஆரோக்யமான நிலையாகும். இது என்னுடைய அபிப்ராயமாகும்.

***கேள்வி : ஸ்ரீமத் ராமாயணத்தின் ஆரம்பத்தில் வரும் விஶ்வாமித்ரரின் பாத்திரம் ஸீதா கல்யாணத்துடன் முடிவடைகிறது. அதன்பின், விஶ்வாமித்ரரைப் பற்றி ராமாயணத்தில் வேறு எங்குமே பேசப்படவில்லையே! ஏன்?***

பதில் : மஹாபாரதத்திலும், ஸ்ரீமத் பாகவதத்திலும் உபகதைகள் பல இருக்கின்றன. ஆனால், ஸ்ரீமத்ராமாயணத்தில் பார்க்கும்பொழுது அநேகமாக உபகதைகளே இல்லை என்று சொல்லலாம். ஆரம்பத்தில் வரும் ருஶ்யஶ்ருங்கரின் சரித்திரமும் கதையை ஒட்டியதே என்று

சொல்லலாம். ஆனால், அதற்கு பின்பு வரும் ஒரு சரித்திரம் அகலியையின் சாப விமோசனம். அந்த சரித்திரத்தை விஶ்வாமித்ரர் வாயிலாக ராமலக்ஷ்மணர்கள் தெரிந்துகொள்வதாக வருகிறது. கௌதம மஹரிஷியின் பத்னியாகிய அகலியையை அடைய ஆசைப்பட்ட தேவேந்திரன், கௌதம மஹரிஷியின் ரூபத்தில் வந்து அகலியையுடன் தகாத முறையில் நடந்தான் என்பதாக அந்த சரித்திரம் வருகின்றது.

ஆனால், வால்மீகி எழுதும்பொழுது, ஸ்பஷ்டமாக, அகலியைக்கு அது தேவேந்திரன் என்று தெரிந்திருந்தது என்று எழுதுகின்றார். தெரிந்தே தவறு செய்த ஒரு மஹரிஷியின் பத்னியை ராமரின் சரண தூளியானது பவித்ரமாக்கிவிட்டது. அவளுக்கு சாப விமோசனம் ஏற்படுகிறது. ரிஷிபத்னி என்ற முறையில் ராமபிரானே அவளை ஸேவிக்கிறார். இந்த ஒரு சரித்திரத்தை வால்மீகி ஏன் முன்பே சொல்லிவைத்தார் என்றால், பின்னர் அசோகவனத்திலிருந்த சீதை பவித்ரமானவள் என்பதற்கு ராமருடைய ஹ்ருதயம் ப்ரமாணம்: சீதையின் ஹ்ருதயம் ப்ரமாணம்: அசோக வனத்திலிருந்த அத்தனை ராக்ஷஸிகளும் ப்ரமாணம்: ஹனுமார் ப்ரமாணம்: விபீஷணர் ப்ரமாணம். இவ்வளவு இருந்தபோதும் கூட, ராமர், அக்னிப்ரவேசம் செய்ய வைத்து சீதையை ஏற்றுக்கொள்கிறார்.

பிறகு, யாரோ ஒருவன் பேசினான் என்பதற்காக சீதையை வனத்திற்கு அனுப்பிவிடுகிறார். இவ்வாறெல்லாம் ஏன் செய்கிறார் என்றால், தெரிந்தே தவறு செய்த ஒருவளை பவித்ரமாக்க தன்னுடைய சரணதூளி போதுமென்ற போதிலும் கூட, குற்றமே இல்லாதபோதும், தன்னுடைய பத்னியென்ற விஷயத்தில் தான் உலகில் எல்லோருக்கும் ராஜாவாக இருப்பதால், கடுமையான தர்மங்களை அனுஷ்டிக்க விரும்பி, லோகத்தின் பொருட்டு, தவறே செய்யாத சீதையை இத்தனை பரீக்ஷைகள் செய்து பார்க்கிறார். இதை எடுத்துக் காட்டுவதற்காகத்தான் அந்த ஒரு உபகதையை வால்மீகி முன்பே சொல்கிறார். அதையும் விஶ்வாமித்ரர் மூலமாகச் சொல்ல வேண்டுமென்பதால்தான் விஶ்வாமித்ரரின் பாத்திரம் வருகின்றது. அதுவும் ஸீதா கல்யாணத்தைப் பூர்த்தி செய்துவிட்டு முடிவடைகிறது.

# வேத கதைகள் - 60

- தர்மஜ்ஞர், வாங்முக ஸார்வபௌம, மேலக்காவேரி
ப்ரஹ்மஸ்ரீ பஞ்சாபகேஶ ஶாஸ்த்ரிகள்

## க்ருஷ்ணாவதார தத்வம்

ஶ்ரிய: பதியான ஸச்சிதானந்த ரூபனான பகவானே ஸ்ரீ ராமராக அவதாரம் செய்தார். ஸ்ரீ ராமாவதாரத்தில், ஸ்ரீராமனின் வடிவழகைக் கண்டு ஆண்கள் கூட மயங்கினர். இதை (பும்ஸாம் மோஹன ரூபாய) என்று கூறப்பட்டுள்ளது. ஸீதாலக்ஷ்மண ஸமேதனாக ஸ்ரீ ராமன் தண்டகாரண்யத்தில் ஸஞ்சாரம் செய்யும் பொழுது, ஒப்பற்ற அழகனான ராமனைக் கண்டு ரிஷிகள் ஆச்சரியமடைந்தனர். ராமரை அணுகி நாங்கள் உன்னை ஆலிங்கனம் செய்துகொள்ள விரும்புகிறோம் என்று கூறினர். அதற்கு, ''அடுத்த அவதாரத்தில் நீங்கள் கோபிகைகளாகத் தோன்றி என்னை ஆலிங்கனம் செய்துகொள்ளலாம்'' என்று பகவான் ஸ்ரீ ராமன் பதில் கூறினான். ''உங்களுக்காக நான் அவதாரம் செய்கிறேன். எனக்காக நீங்களும் அவதாரம் செய்யுங்கள்'' என்று பகவான் கூறி க்ருஷ்ணாவதாரம் செய்தார்.

மஹரிஷிகளும் தேவர்களும் கோபிகைகளாக தோற்றமளித்து ஸ்ரீக்ருஷ்ணனின் ஆலிங்கனத்தைப் பெற்றனர். ஆனந்தம் - நந்தன், முக்தி - யசோதா, ப்ரஹ்மாவின் பெண் - தேவகி, வேதம் - வசுதேவர், வேதத்தின் பொருள்-ராமகிருஷ்ணர்கள் என்று இவ்வாறு அவதரித்தனர். இவ்விதம் பகவான் க்ருஷ்ணாவதாரத்தில் அவதரித்து ஸ்ரீ ப்ருந்தாவனத்தில் கோப கோபிகைகளுடன் விளையாடினான்.

மேலும் க்ருஷ்ணனுடன், ருக்குகள் - பசுக்கள், கமலாஸனம் - கண்ணன் கையில் உள்ள கழி, சிவன்-புல்லாங்குழல், கொம்பு-இந்திரன், காம, க்ரோத, லோப, மோஹ, மத, மாத்ஸர்யர்ங்கள் - அரக்கர்கள், ஆதிசேஷன் - ராமன், ருக்குகள் - (எட்டாயிரத்து எண்ணூத்தி எட்டு) கோபஸ்த்ரீகள், உபநிஷத்துக்கள் - கோபிகைகள், த்வேஷம் - சாணூரம், மாத்ஸர்யம் - முஷ்டிகன் என்ற மல்லர்கள், கொழுப்பு - குவலயாபீடம் என்ற யானை, கர்வம் - அரக்கன், தயை - ரோஹிணீ, பூமி - ஸத்யபாமா, பெரிய வ்யாதி - அகாஸுரன்,

கலி-கம்ஸன், அடக்கம் - குசேலன் என்ற நண்பன், அக்ரூரர் உத்தவர் இவர்கள் தமம், பாற்கடல் - வெண்ணை வைக்கும் வெண்பாண்டம், பாற்கடலில் விளையாடுவது போல் ஸ்ரீ க்ருஷ்ணன் இங்கு விளையாடினான்.

மேலும், வேதம் - சக்ரம், லக்ஷ்மீ - ஶங்கம், வாயுபகவான் - வைஜயந்தி மாலை, தர்மம் - சாமரம், கச்யபர் - உரல், அதிதி - கயறு, காளி - கதை, மாயை - சார்ங்கம் என்ற வில், கருடன் - பாண்டீரம் என்ற ஆலமரம், நாரதர் - சுதாமா, பக்தி - துளசி ஆகவும் அவதாரம் செய்தனர். இவ்விதம் கண்ணனின் இந்த உண்மையை எவன் அறிகிறானோ அவன் மாயையாகிற கட்டிலிருந்து விடுபட்டு ஆனந்த நிலையை அடைகிறான். அவதார வரலாறு ஸ்ரீ க்ருஷ்ண உபநிஷத்தில் உள்ளது.

---

ஒரு ஸமயம், ஒருவர் பப்பா ராமதாஸரிடம், ''நீங்கள் ஸதா, ஓம் ஸ்ரீராம் ஜயராம் ஜயஜயராம் என்று ஜபம் செய்கிறீர்களே! நீங்கள் பகவானை பார்க்கவில்லையா? பகவானை பார்க்கவேண்டும் என்ற உத்தேசத்திற்காகத் தானே ஒருவர் ஜபம் செய்ய வேண்டும். பகவானைப் பார்த்த பிறகும் ஒருவர் ஏன் ஜபம் செய்ய வேண்டும்?'' என்று வினவினார்.

அப்பொழுது பப்பா ராமதாஸர் அவரிடம், அங்கு ஸமுத்ரத்தில் ஸங்கமம் ஆகும் ஒரு நதியைக் காண்பித்து, ''இப்பொழுது இந்த நதி ஸமுத்ரத்தில் ஸங்கமம் ஆகிவிட்டதா?'' என்று கேட்டார். அதற்கு பப்பா ராமதாஸரிடம் கேள்வி கேட்டவர், ''ஆம், நதி ஸங்கமம் ஆகிவிட்டது'' என்றார். பிறகு பப்பா ராமதாஸர், மீண்டும் அவரிடம் நதியைக் காண்பித்து, ''இப்பொழுது நதி ஸமுத்திரத்தை நோக்கி ஓடிக்கொண்டிருக்கிறதா?'' என்று வினவினார். அதற்கு அவர், ''ஆம், இப்பொழுது நதி ஸமுத்திரத்தை நோக்கி ஓடிக்கொண்டிருக்கிறது'' என்றார்.

''ஒரே ஸமயத்தில், நதி இப்படி ஸமுத்ரத்தை நோக்கி ஓடிக்கொண்டும், ஸமுத்ரத்தில் ஸங்கமம் ஆகிக்கொண்டும் இருக்கிறதல்லவா! இதுவே நீங்கள் கேட்ட கேள்விக்கு பதில்'' என்று பப்பா ராமதாஸர் விளக்கம் அளித்தார்.

# எந்தரோ மஹானுபாவுலு - 50

ஏதாவது ஒரு உத்தேசத்தை முன்னிட்டு செய்யப்படும் கார்யங்களுக்கு கர்மம் எனப் பெயராகும். ஆனால், உத்தேசம் ஏதுமின்றி செய்யப்படும் சேஷ்டைகளோ - கார்யங்களோ லீலைகள் எனப்படும். குழந்தைகளின் சேஷ்டைகளை நாம் அப்படித்தான் அனுபவிப்போம். அதில் ஸ்வார்த்தம் ஏதுமிருக்காது. பகவத் பக்தர்களின் கார்யங்களும் லீலைகளாகத்தான் இருக்கும். எந்நேரமும் பகவானின் ப்ரேமையில் மூழ்கித் திளைக்கும் ப்ரேம பக்தர்களின் செயல்கள் லோக விலக்ஷணமாகவும் லீலா விநோதங்களாகவும் தான் இருக்கும்.

அவதூத பக்தரான நித்யானந்தரின் நிலையும் அப்படித்தான் இருந்தது. அவரது நடை, பேச்சு, சேஷ்டைகள் யாவும் விலக்ஷணமாக இருந்தன. அவரின் பாஷையே ஸாதாரண மனிதர்களின் பாஷையைப் போல் இராது. குழந்தையைப் போல் அனைவரிடமும் அன்பு செலுத்துவார். யாரிடமும் பயம் கிடையாது. எவரிடமும் வெட்கமும் கிடையாது. நிர்வாணமாக அலைந்தாலும் யாராவது வஸ்த்ரம் உடுத்திவிட்டாலும் அவருக்கு எந்தவித ப்ரஜ்ஞையும் இராது. இருபத்தியிரண்டு வயதாகியும் ஸதா பாலபருவத்து நிலையிலேயே இருந்தார். ஸ்ரீவாஸ் பண்டிதரின் மனைவியான மாலதி தேவியிடம் குழந்தையைப் போல் உணவை ஊட்டி விட்டால்தான் உண்பார். குழந்தையைப் போல் கோபித்துக்கொண்டு அடம்பிடிப்பார். கௌராங்கர் எவ்வளவு புத்திமதி சொன்னாலும் ஒரு விளைவும் இராது. சரீர ப்ரஜ்ஞையின்றியே திரிவார்.

ஒருநாள், ஸ்ரீவாஸ் பண்டிதர் தனது முற்றத்தில் நின்றுகொண்டு சாப்பிட்டுக்கொண்டிருக்கும் ஸமயம், பகவானின் நெய் தீப பாத்திரத்தை ஒரு காகம் தூக்கிக்கொண்டு சென்றுவிட்டது. மாலதி தேவிக்கு இதனால் மிகவும் வருத்தம் ஏற்பட்டது. அன்னையின் வருத்தத்தைக் கண்டு நித்யானந்தர் சிறுபையனைப் போல் கையில் உணவுத் துண்டத்தைக் காட்டிக்கொண்டு ஒரு பாடகனைப் போல் காக்கையை நோக்கிப் பாட ஆரம்பித்தார்.

*''காக்காய் அண்ணா வா வா பாலன்னம் சாப்பிடு*
*உன் துண்டத்தை எடுத்துக்கொண்டு என் தீபத்தை தந்து விடு.*
*அன்னை மிகவும் அழுகிறாள். என் பிரியனே வாவா''*

என்று தலையை அசைத்துக்கொண்டு பாட நிஜமாகவே காக்காய் அருகில் வந்து அந்த பித்தளை பாத்திரத்தை இவரது அருகில் போட்டுவிட்டுச் சென்றது. அன்னை, எல்லையில்லாத ஆனந்தத்தை அடைந்தாள். இந்த செயலில் ஈச்வரபாவத்தை உணர்ந்தாள். உடனே நித்யானந்தர் கடகடவென சிரித்து அன்னையை நோக்கி மறுபடி,

*''பாத்திரத்தை வரவழைத்தேனே*
*எனக்குத் தருவாய் இனிப்பை நீயே''*

என்று பாட அன்னை அவரது சிறு குழந்தைத்தனத்தைக் கண்டு சிரித்தாள்.

ஒருநாள் திடீரென்று நித்யானந்தர் வீட்டைவிட்டு வெளியேறி வீதி, கடைத்தெரு வழியாக ஓட ஆரம்பித்தார். தெருவில் தன்னை மறந்து ஓடும்பொழுது கௌபீனம் அவிழ்ந்து விழுந்தது. அதை எடுத்துத் தலையில் சுற்றிக்கொண்டு திகம்பரராக சிவனைப் போல் தாண்டவம் ஆட ஆரம்பித்தார். மற்ற சிறுவர்கள் கைதட்டி சிரித்துக்கொண்டே இவர் பின் ஓடினர். இப்படியே ஓட்டமாக ஓடி மஹாப்ரபுவின் வீட்டை அடைந்தார். ப்ரபு அப்பொழுது தனது ப்ரியபத்னி விஷ்ணுப்ரியாவுடன் அமர்ந்து கொண்டு ப்ரேம ஸல்லாபம் செய்து கொண்டிருந்தார். விஷ்ணுப்ரியா தாம்பூலம் தயாரித்து ப்ரபுவிற்கு ஸமர்ப்பித்துக்கொண்டிருந்தாள்.

அந்த ஸமயத்தில் திடீரென உன்மத்த அவதூதரான நித்யானந்தர் அங்கு ப்ரவேசம் செய்தார். அவரது கண்கள் சிவந்து இருந்தன. ஸம்பூர்ண சரீரமும் புழுதியால் அழுக்கேறி இருந்தது. தலையில் கௌபீனத்தைச் சுற்றிக்கொண்டு இருந்த நெடிதுயர்ந்த நித்யானந்தர் ஒரு தேவனைப் போல் இருந்தார். ப்ரபுவிடம் வந்து நின்றுகொண்டு பித்தனைப் போல் 'ஹூம்' 'ஹூம்' என்று கர்ஜித்தார். விஷ்ணுப்ரியா வெட்கத்துடன் உள்ளே ஓடிச் சென்று கதவைச் சாத்திக்கொண்டாள். சசீமாதா தனது மருமகள் இப்படி ஓடி வருவதைக் கண்டு, ''என்ன நடந்தது'' என வினவினாள். தனது சிரிப்பை புடவையால் பொத்தி

அடக்கிக் கொண்டு மெதுவாக ‘‘உங்களது பெரிய மகனைப் பாருங்கள். எப்படி அவதூதராக இன்று வந்திருக்கிறார்’’ என்று கூறினாள். அன்னையும் நித்யானந்தரைக் கண்டு சிரித்தாள்.

ப்ரபு நித்யானந்தரைப் பார்த்து, ‘‘ஸ்ரீபாத! ஏன் இன்று இப்படி நிர்வாணமாக இருக்கிறாய்! சீக்கிரம் கௌபீனம் தரித்துக்கொள்’ என்றார். ஆனால் நித்யானந்தருக்கோ ஒன்றும் புரியவில்லை. எதைத் தரித்துக்கொள்ளச் சொல்கிறார் என்று தெரியவில்லை. உடனே கௌராங்கர் தனது உத்தரீயத்தை எடுத்து அவருக்கு அணிவித்து, அவரது கைகளைப் பிடித்துக்கொண்டு தன் பக்கத்தில் அமர வைத்தார். மெதுவாக ‘‘நித்யானந்தா எங்கிருந்து வருகிறாய்? என்ன ஆயிற்று? ஏன் இப்படி அழுக்காக இருக்கிறாய்’’! எனக் கேட்டார்.

ஸ்ரீபாதரோ ‘‘ஹூம் ஹூம்’’ என்ற உறுமலைத் தவிர ஒன்றும் கூறாமல் இருந்தார். அவரது இப்பேர்ப்பட்ட உயர்ந்த ப்ரேமாவஸ்தையைக் கண்டு ப்ரபு மிகவும் ஆனந்தமடைந்தார். தனது அனைத்து பக்தர்களையும் உடனே அழைத்து வரச் சொன்னார். எல்லோரும் நித்யானந்தரைச் சுற்றி அமர்ந்தனர். ப்ரபு நித்யானந்தரை நோக்கி ப்ரார்த்தித்தார். ‘ஸ்ரீ பாத! உனது ப்ரஸாதமான கௌபீனத்தை க்ருபை செய்து எங்களுக்கு அளிக்க வேண்டும்’ என்றார். உடனே நித்யானந்தர் தனது தலையில் சுற்றியிருந்த வஸ்த்ரத்தை அவிழ்த்து எறிந்தார்.

ப்ரபு உடனே அதை மிகவும் பயபக்தியுடன் எடுத்து தனது தலையில் வைத்துக்கொண்டார். பிறகு அதை சிறுசிறு துண்டுகளாகக் கிழித்தார். அனைத்து பக்தர்களுக்கும் ஆளுக்கு ஒரு துண்டைக் கொடுத்து, ‘‘இந்த ப்ரஸாத வஸ்த்ரத்தை நீங்கள் எல்லோரும் மிகவும் அக்கறையுடனும் பக்தியுடனும் வைத்துக்கொள்ளுங்கள்’’ என்றார். ப்ரபுவின் ஆஜ்ஞையைக் கேட்டு சிலர் அந்த வஸ்த்ரத் துண்டை கழுத்தில் கட்டிக்கொண்டனர். சிலர் தலையில் வைத்துக்கொண்டனர். பிறகு ப்ரபு, நிதாயி என்ற நித்யானந்தரின் பாத பத்மங்களுக்கு சுகந்த தைலத்தைத் தடவி விட்டு அபிஷேகம் செய்தார். நிதாயியின் பாதோதகத்தை அனைவருக்கும் வினியோகம் செய்தார். மீதத்தைத் தானே முழுவதும் அருந்தினார். பிறகு, ‘‘இன்று நாம் க்ருதக்ருத்யர்கள் ஆனோம். நமது ஜன்மம் சபலம் ஆயிற்று. இன்றுதான் யதார்த்தமான

க்ருஷ்ண பக்தி நமக்குக் கிடைத்தது. ஸ்ரீபாதரின் சரணாம்ருதபானம் நம்மை தன்யர்களாக்கிவிட்டது'' என்று நெகிழ்வுடன் கூறினார்.

எல்லாவித ஆராதனங்களில் சிறந்தது விஷ்ணுவின் ஆராதனம். அதிலும் சிறந்தது விஷ்ணு பக்தர்களின் ஆராதனம் என்று பத்மபுராணம் கூறுகிறது. அதுபோல், அன்று நிதாயியின் ஆராதனத்தால் அனைவரும் விசேஷமான ஆனந்தத்தை அடைந்தனர். சிறிது நேரம் கழித்து நிதாயிக்கு சுயநினைவு வந்தது. உடனே சிறு குழந்தையைப் போல் சசீமாதாவிடம், ''எனக்கு மிகவும் பசிக்கிறது. உணவு தாருங்கள்'' என்றார். அன்னை தந்த உணவை மேலும் கீழும் இரைத்துக்கொண்டே சாப்பிட்டார். பிறகு அன்னையின் சரணங்களை சேவிக்க அவர் ஓட, அன்னை, அவரிடமிருந்து தப்பித்துக் கொண்டு ஓட, அனைவரும் சிரித்து மகிழ்ந்தனர்.

(தொடரும்)

**- ஜயந்தி ஜானகிராமன்**

---

லஹானபண தேகா தேவா-முங்கீ ஸாகரேசா ரவா
ஐராவத ரத்ன தோர-தயா அங்குசாசா மார
ஜ்யாசே அங்கீ மோடே பண-தயா யாதனா கடீண
துகாம்ஹணே ஜாண-வ்ஹாவே லஹாணாஹூனி லஹான

**- ஸ்ரீ துகாராம் ஸ்வாமிகளின் அபங்கம்**

ஹே பாண்டுரங்கா! எனக்கு எளிமையைக் கொடு. ஸ்வதந்திரமாக இருக்கும் சிற்றெரும்பிற்கு சர்க்கரை எளிதில் கிடைத்துவிடுகிறது. ஆனால், இந்திரனின் பட்டத்து யானையான ஐராவதம், பெருமைமிக்க ரத்தினத்தை தலையில் சூடியிருந்தாலும், யானைப்பாகனின் அங்குசத்தால் ஸதா குத்தப்படுகிறது. எவன், தன்னை பெரியவன் என்று பெருமை கொள்கின்றானோ அவன் பல இடர்களை பொறுத்துக்கொள்ள வேண்டியுள்ளது. எனவே, சிறியவரினும் சிறியவராய், மிக்க எளியவனாய் இருப்பதுதான் நலம் என்கிறார் துகாராம் ஸ்வாமிகள்.

# ஸனாதனப் புதிர் - பகுதி - 14

தொகுப்பு : **"ஆத்ரேயன்",** சென்னை.

1. குமரிலபட்டருடைய தாய் தந்தையர் பெயர் என்ன?
2. வித்யாரண்யர், சாயனர் இவர்கள் உறவு முறை என்ன? சாயனர் செய்த மிகப் பெரிய தொண்டு எது?
3. ஆர்யஸமாஜத்தை நிறுவிய தயாநந்தருடைய இயற்பெயர் என்ன? இவரது குரு யார்?
4. ப்ரஹஸ்பதி யாருடைய புதல்வர்? இவருடைய மற்ற பெயர்கள் என்ன?
5. அசுர குருவான சுக்ராச்சாரியாரின் மற்ற பெயர்கள் யாவை? இவரது தந்தை பெயர் என்ன? சுக்ராச்சாரியாரது புதல்வர் பெயர் என்ன?
6. பரத்வாஜர் யாருடைய புதல்வர்? இவர் வேதத்தை எத்தனை ஆண்டுகள் பயின்றார்?
7. கர்காசார்யர் எந்த சாஸ்த்ரங்களில் ப்ரஸித்தி பெற்றவர். இவரது பிள்ளையின் பெயர் என்ன? கர்காசார்யர் யாருக்கு நாமகரணம் செய்தார்?
8. காலையில் எழுந்தவுடன் ஸ்மரிக்க வேண்டிய ஐந்து உத்தம ஸ்த்ரீகள் யாவர்?
9. அத்ரி முனிவரின் மனைவி பெயர் என்ன? அவர் யாருடைய பெண்? அத்ரி முனிவரின் புத்திரர்களுக்கு என்ன பெயர்?
10. ஹரிச்சந்திரன், சுனசேபன் இவர்களைப் பற்றி எந்த வேதத்தில் காணப்படுகிறது. சுனசேபன் யாருடைய பிள்ளை? ஹரிச்சந்திரனின் பிள்ளையின் பெயர் என்ன?

ஸனாதனப் புதிர் பகுதி - 14க்கான பதில்களை
ஜூன் 25-ந் தேதிக்குள் அனுப்பவேண்டும்.

## ஸனாதனப் புதிர் - 13-க்கான பதில்கள்

1. ராகு, கேது - ஸுவர்பானு என்ற அசுரன் அமுதம் சாப்பிட உட்காருகையில் அவனை சூர்யன், சந்திரன் விஷ்ணுவிடம் காட்டிக் கொடுக்க, விஷ்ணு ஸுவர்பானுவின் தலையை வெட்ட, அவன் அமுதம் சாப்பிட்டபடியால் சாகாமல் தலை ராகுவாகவும், உடல் கேதுவாகவும் ஆகி நவக்ரஹத்தில் இடம் பெற்றுவிட்டான்.
2. புலோமா என்ற அஸுர ராஜனின் பெண். சசீ, பௌலோமி, இந்த்ராணி
3. தண்ணீர் நுரையை
4. க்ரது, தக்ஷன், ஸத்யன், வஸு, துரி, ரோசனன், புரூரவன், ஆர்த்ரவன், காலன், காமன்.
5. சூர்யன் மனைவி 'படவா' சுவர்சலா சூர்யனின் வெப்பம் தாங்காமல் பெண் குதிரையாகி படவா என்ற பெயரில் ஓடிவிட, சூர்யன் ஸமாதானம் செய்து அழைத்து வந்தபொழுது, பிறந்த குழந்தைகள் அஸ்வினி குமாரர்கள்.
6. அனந்தன், வாஸுகி, சேடின், பத்மநாபன், கம்பலன், சங்கபாலன், தார்த்தராஷ்ட்ரன், தக்ஷகன், காளீயன்.
7. குபேரன் - அளகாபுரி, வடக்குதிசை
8. ஶங்கம், பத்மம், மஹாபத்மம், மகரம், கச்சபம், முகுந்தம், குந்தம், நீலம், வர்சஸ் - இவர்களின் நாயகர் குபேரன்.
9. அருணன், கருடன். அருணன்-சூர்யசாரதி, கருடன்- விஷ்ணுவாஹனன்
10. துவாரகாபுரி; சுதர்மா

## ஸனாதனப் புதிர் - பகுதி - 12க்கான பதில்களை அனுப்பி பரிசு பெற்றவர்கள் விவரம்.

**முதல் பரிசு ரூ.** 250/-

C. Krishna Swami, 23 (New No. 32), Jambulingam Street, Nungambakkam, Chennai - 600 034.

**இரண்டாம் பரிசு ரூ.** 150/-

Mrs. S. Saraswathy, 4, (New No. 9), Sivakumar Street, K.K.Pudur, Coimbatore - 641 038.

**மூன்றாம் பரிசு ரூ.** 100/-

S. Saranathan, 10/21, (New No. 9), Ranganathan Street, Nehru Nagar, Chormpet, Chennai - 600 044.

# தமிழக திருக்கோயில்களில் ஒரு கால பூஜை -1

தமிழக அரசின் இந்து சமய அறநிலைய ஆட்சித்துறையின் கீழ்வரும், நலிவுற்ற திருக்கோயில்களின் ஒருகால பூஜை வைப்புநிதி திட்டத்தின் கீழ், நம் ஸ்வாமிகளின் அறகட்டளைகளின் சார்பாக, சுமார் 100 கோயில்களுக்கு தலா ரூ. 2500/- அளிக்கப்பட்டுள்ளது. அவற்றின் விவரம்.

**கடலூர் மாவட்டம்**

1. அருள்மிகு கும்பேஸ்வரர் திருக்கோயில், குறிஞ்சிப்பாடி, கடலூர் வட்டம்
2. அருள்மிகு விநாயகர் திருக்கோயில், நெல்லிக்குப்பம், பண்ருட்டி வட்டம்
3. அருள்மிகு மாரியம்மன் திருக்கோயில், திருவதிகை, பண்ருட்டி வட்டம்
4. அருள்மிகு வரதராஜப்பெருமாள் திருக்கோயில், தென்தலைக்குளம், சிதம்பரம் வட்டம்
5. அருள்மிகு மாரியம்மன் திருக்கோயில், குணமங்கலம், காட்டுமன்னார்குடி வட்டம்
6. அருள்மிகு காத்தாயி அம்மன் திருக்கோயில், குருங்குடி, காட்டுமன்னார்குடி வட்டம்
7. அருள்மிகு பிள்ளையார் திருக்கோயில், அழிஞ்சிமங்கலம், காட்டுமன்னார்குடி வட்டம்
8. அருள்மிகு வரதராஜபெருமாள் திருக்கோயில், தண்டேஸ்வரநல்லூர், காட்டுமன்னார்குடி வட்டம்
9. அருள்மிகு முருகன் திருக்கோயில், சேலவிழி, காட்டுமன்னார்குடி வட்டம்
10. அருள்மிகு சித்திவிநாயகர் திருக்கோயில், செட்டித்தாங்கல், காட்டுமன்னார்குடி வட்டம்

11. அருள்மிகு சுப்ரமணியசுவாமி திருக்கோயில், மேலக்கடம்பூர், காட்டுமன்னார்குடி வட்டம்

12. அருள்மிகு வரதராஜபெருமாள் திருக்கோயில், அம்பாள்புரம், காட்டுமன்னார்குடி வட்டம்

13. அருள்மிகு மாரியம்மன் திருக்கோயில், ஆதிவராஹநல்லூர், காட்டுமன்னார்குடி வட்டம்

14. அருள்மிகு வல்லபவிநாயகர் திருக்கோயில், கள்ளிப்பாடி, காட்டுமன்னார்குடி வட்டம்

15. அருள்மிகு மாணிக்கநாச்சியார் திருக்கோயில், காவாலக்குடி, காட்டுமன்னார்குடி வட்டம்

16. அருள்மிகு பிள்ளையார் திருக்கோயில், நாச்சியார்பேட்டை, காட்டுமன்னார்குடி வட்டம்

17. அருள்மிகு வரதராஜபெருமாள் திருக்கோயில், குமராட்சி, காட்டுமன்னார்குடி வட்டம்

18. அருள்மிகு வேணுகோபாலஸ்வாமி திருக்கோயில், கொளக்குடி, காட்டுமன்னார்குடி வட்டம்

19. அருள்மிகு பேச்சியம்மன் திருக்கோயில், கோவிலாம்பூண்டி, சிதம்பரம் வட்டம்

20. அருள்மிகு முருகன் திருக்கோயில், கொங்கராயான் பாளையம், சிதம்பரம் வட்டம்

21. அருள்மிகு மாரியம்மன் திருக்கோயில், முள்ளிப்பள்ளம் காலனி, கீழ்புவனகிரி, சிதம்பரம் வட்டம்

22. அருள்மிகு காளியம்மன் திருக்கோயில், நஞ்சைமுகத்துவாழ்க்கை, சிதம்பரம் வட்டம்

(தொடரும்)

# பாலகர்களுக்கு ஒரு கதை - 54

ப்ருந்தாவனத்தில் ஸூர்தாஸ் என்றொரு பக்தர் இருந்தார். அவர் பார்வை இல்லாதவர். வீடுவீடாகச் சென்று க்ருஷ்ண நாமத்தை கீர்த்தனம் செய்து பிக்ஷை எடுப்பார். கையினால் செய்யப்பட்ட தேங்காய் ஓடும், ஒரு தந்தியும் கொண்ட ஒரு ஸாதாரண தம்புராவைக் கையில் வைத்துக்கொண்டே கீர்த்தனம் செய்து வந்தார். பிக்ஷையில் கிடைத்ததை பக்கத்திலுள்ள ஒரு காட்டிற்குச் சென்று உட்கொள்வார். பிறகு அங்கேயே மரத்தடியில் ஓய்வு எடுத்துக்கொள்வார். இவ்வாறு அவர் ஜீவனம் நடத்தி வந்தார்.

ஒரு ஸமயம், அந்நாட்டு ராஜாவின் மிக உயர்ந்த ஜாதிக்குதிரை ஒன்று காணாமல் போய்விட்டது. ராஜஸிப்பந்திகள் அந்த குதிரையைத் தேடிக்கொண்டு ஸூர்தாஸர் வாஸம் செய்து வந்த காட்டிற்குள் நுழைந்தனர். அங்கே ஒரு மரத்தடியில் ஸூர்தாஸ் அமர்ந்திருப்பதைக் கண்டார்கள். நாமகீர்த்தனம் செய்துகொண்டு பிக்ஷை எடுத்து ஜீவனம் நடத்தும் ஸூர்தாஸரை பெரிய மஹான் என்று எண்ணி குதிரை காணாமல் போனதை அவரிடம் கூறி, அது இருக்குமிடத்தை கண்டுபிடித்து விடலாம் என்று எண்ணினார்கள்.

ஸூர்தாஸரும், அவர்கள் கூறிய குதிரையின் விவரங்களைக் கேட்டவுடன் அவர்களைப் பார்த்து பக்கத்தில் உள்ள ஒரு மரத்தைக் காண்பித்து, ''அதில் காகம் ஒன்றுள்ளதா'' என்று பார்க்கச் சொன்னார். அவர்களும் அவ்வாறே உள்ளது என்று கூறவே, ஸூர்தாஸரும் விளையாட்டாக 'அக்காகம் பறந்து செல்லும் திக்கை நோக்கிச் சென்றால் குதிரை கிடைத்து விடும்' என்றார். ஸிப்பந்திகள் அவர் வாக்கில் விஶ்வாஸத்துடன் காகத்தைப் பின்தொடர குதிரையைக் கண்டனர். அவர்கள் உடனே ஸூர்தாஸரின் பாதங்களில் விழுந்து - 'தாங்கள் திவ்யத்ருஷ்டி பொருந்திய பெரிய மஹான். குதிரை கிடைத்துவிட்டது'' என்று வியந்து போற்றினார்கள்.

இதைக் கேட்ட ஸூர்தாஸர் மௌனத்தில் ஆழ்ந்து சிந்தித்தார் - ''நாம் வயிற்றுப் பிழைப்புக்காக விளையாட்டாக க்ருஷ்ண நாம கீர்த்தனம் செய்ததற்கே நம் வாக்கு பலித்துவிட்டது, நம்மை மஹான்

என்றும் போற்றுகின்றனர். வாஸ்தவமாக நாம் ஈடுபாடுடனும் ப்ரேமையுடனும் க்ருஷ்ண கீர்த்தனம் செய்தால் க்ருஷ்ணனே கிடைத்துவிடுவானன்றோ!''

இந்நிகழ்ச்சி அவர் வாழ்க்கையில் ஒரு மாற்றத்தை ஏற்படுத்தியது. அன்று முதல் அவர் பரம க்ருஷ்ண பக்தராகி நாம கீர்த்தனம் செய்தார். யத்ருச்சையாக ப்ருந்தாவனம் வந்தடைந்த ஸ்ரீவல்லபாச்சார்யர் ஸூர்தாஸருக்கு தீக்ஷையளித்தார். குரு க்ருபையால் ஸூர்தாஸர் ஞான த்ருஷ்டியைப் பெற்றார்.

ஸ்ரீ வல்லப ஸம்ப்ரதாயத்தின்படி கோவர்த்தனத்தின் மேல் உள்ள ஸ்ரீநாத் என்ற ஸ்வாமிக்கு நித்யம் எட்டு வேளைகளில் பூஜையும் அலங்காரமும் நடைபெறும். பார்வையில்லாதபோதிலும் திவ்ய த்ருஷ்டி பெற்றிருந்த ஸூர்தாஸர் ஸ்ரீநாத் செய்துகொண்டுள்ள அலங்காரங்களை நுணுக்கமாக அப்படியே கீர்த்தனங்களில் வர்ணிப்பார். இதிலிருந்து என்ன தெரிய வருகின்றது என்றால் விளையாட்டாக பகவந்நாமாவைச் சொன்னால் கூட போதும். அதனுடைய பலன் நம்மை விடாது. எப்படியாவது ஒரு தகுந்த குருவின் இடத்தில் நம்மைக்கொண்டு சேர்த்து நமக்கு இறைவனுடைய தர்சனத்தைக் கொடுத்துவிடும் என்பது தெரிகின்றது.

---

*நாட்டம் என்றே இரு சற்குரு*
*பாதத்தை நம்பும் பொம்மல்*
*ஆட்டம் என்றே இரு பொல்லா*
*உடலை அடர்ந்த சந்தைக்*
*கூட்டம் என்றே இரு சுற்றத்தை*
*வாழ்வைக் குடம் கவிழ்நீர்*
*ஓட்டம் என்றே இரு நெஞ்சே*
*உனக்கு உபதேசம் இதே !*

**— பட்டினத்தார்**

# ப்ருந்தாவனமும் நந்தகுமாரனும் - 8

ஸ்ரீக்ருஷ்ண கதையிலேயே ஏகாந்த ப்ரேமைகொண்டு வாழ்ந்த மஹாத்மா ஸ்ரீ ப்ராணக்ருஷ்ணதாஸ் பாபாஜியின் சரித்ரத்தைப் பார்ப்போம்.

ஸ்ரீ ப்ராணக்ருஷ்ணதாஸ் பாபா 1802-ஆம் வருஷம் வர்தமான ஜில்லாவில் உள்ள கால்னா என்ற இடத்திற்கு அருகில் உள்ள பாக்னாபாடா என்ற ஊரில் பிறந்தார். இவர் யதுநந்தன் கோஸ்வாமி என்பவரிடம் தீக்ஷை பெற்று கால்னாவில் வாழ்ந்த பகவன்தாஸ்பாபா என்ற சித்த புருஷனின் ஆம்ரமத்தில் வாழ்ந்து பஜனை செய்துகொண்டு இருந்தார். பிறகு ப்ருந்தாவனத்திற்கு வந்து காளீயதாக்கில் வசிக்கலானார். அங்கு ஜகதீஷ்தாஸ்பாபா, தயாள்தாஸ்பாபா என்ற சித்தபுருஷர்களுக்கு ஸேவை செய்து வந்தார். இரு மஹான்களுக்கும் ஸேவை செய்து, ஸந்த் ஸேவை செய்வதில் சிறந்து விளங்கிய இவரது செயல்கள் ஆன்மீக ஸாதகர்களுக்கு பாடங்களாக விளங்கின.

ஜகதீஷ்பாபா, தயாள்தாஸ்பாபா இருவரும் எந்நேரமும் க்ருஷ்ண லீலாசிந்தனம் செய்துகொண்டு உடல் மனம் இவற்றின் செயல் இழந்து **பா**வ ஸாகரத்தில் திளைத்துக்கொண்டு இருந்தனர். ப்ராணக்ருஷ்ணதாஸ் பாபா தனது ஆசார்யர்களுக்கு வேண்டிய ஆஹாரத்துக்கு ஏற்பாடு செய்வார். இருவருக்கும் கைகால்கள் பிடித்து விடுவார். அவர்களது மல மூத்திரத்தை சுத்தம் செய்து அவர்களது மனது அறிந்து மனோபாவத்தின் மாறுதல்களை உணர்ந்து ஸமயோசிதமாக ஸேவை புரிந்து வந்தார். இப்படி உயர்ந்த குரு ஸேவை செய்தே இவரும் ஒரு சித்த புருஷர் ஆகிவிட்டார்.

காளீயதாக்கைச் சுற்றி வெகுதூரம் துடைப்பத்தால் பெருக்கி சுத்தம் செய்துகொண்டே இருப்பார். மானஸீகமாக ராதாக்ருஷ்ண நிகுஞ்சத்தைப் பெருக்கி சுத்தம் செய்வதாக **பா**வித்துக் கொள்வார். அந்த ஸமயத்தில் எதிரில் வரும் சிறியவர் பெரியவர் யாரானாலும் துடைப்பத்தைக் கீழே வைத்துவிட்டு அவர்களை ஸாஷ்டாங்கமாக நமஸ்காரம் செய்வார். த்யாக வைராக்யத்தில் இவர் தனது குருவான ஜகதீஷ்பாபாவைப் போலவே சிறந்து விளங்கினார். ஒரு விசேஷ நிகழ்ச்சியைப் பார்ப்போம்.

ஜகதீஷ்தாஸ்பாபாவுக்கு பக்தர்கள் தரும் காணிக்கைகளை அவர் கையால் தொடவே மாட்டார். ப்ராணக்ருஷ்ணதாஸுக்கு அவைகளை சேகரித்து உசித ஸமயத்தில் வைஷ்ணவ ஸேவை செய்து அவற்றை விநியோகம் செய்ய வேண்டும் என கட்டளை இட்டிருந்தார். ஒரு ஸமயம், ஜகதீஷ்பாபாவிற்கு ஒரு தனவான் ஒரு வாளி, டம்ளர், பத்து ரூபாய் ஆகியவற்றை காணிக்கையாகத் தந்தார். ப்ராணக்ருஷ்ணதாஸ் அவற்றைத் தனியாக எடுத்து வைத்தார். அருகில் இருந்த ஒரு பேராசை பிடித்த கபட பாபா அவற்றைத் தனக்குத் தருமாறு ஜகதீஷ்தாஸ்பாபாவைக் கேட்டார். அவரும் ''நான் க்ருஷ்ணதாஸிடம் சொல்லி உனக்கு அவற்றைத் தருமாறு சொல்கிறேன்'' என்று சொன்னார். அப்புறம் அதைப்பற்றி மறந்துவிட்டார்.

இரண்டு நாள் கழித்து கபடமான பாபா கோபமடைந்து ஒரு செங்கல்லைத் தூக்கி ஜகதீஷ்பாபாவின் மேல் எறிந்தான். அவருக்கு காயம் ஏதும் ஏற்படவில்லை. ஆனாலும் அவருக்குத் தான் கொடுத்த வாக்கை நிறைவேற்றவில்லை என்று நினைவு வந்துவிட்டது. உடனே, அவர் ப்ராணக்ருஷ்ணதாஸைக் கூப்பிட்டு, ''நான் அந்த ஜடாதாரி பாபாவிற்கு அபசாரம் இழைத்துவிட்டேன். அவருக்கு அந்த வாளி, டம்ளர், பத்துரூபாய் ஆகியவற்றை உன் மூலமாகத் தருகிறேன் என வாக்குக் கொடுத்தேன். ஆனால் மறந்துவிட்டேன். எனவே, அவர் க்ருபை கூர்ந்து என்மேல் செங்கல் எறிந்து அதை நினைவுபடுத்தி இருக்கிறார். நீ தயவு செய்து அந்தப் பொருள்களை அவருக்கு அளித்துவிடு'' என்று சொன்னார்.

அதற்கு ப்ராணக்ருஷ்ணதாஸ் ''ஆமாம்! அவச்யம் தந்து விடவேண்டியதுதான். அவரிடம் இன்னும் அதிகமாக க்ருபை செய்ய வேண்டுமென என கேட்டுக் கொள்வோம். இங்கு வந்து சேரும் அனைத்துப் பொருள்களையும் அவரே எடுத்துக்கொண்டு நமக்கு மாயாஸ்பர்சத்திலிருந்து அனாயாஸமாக முக்தி அளிக்க வேண்டும் என கேட்டுக்கொள்வோம். மதுகரியைத் தவிர்த்து நமக்கு எதுவும் தேவையில்லை என்று சொன்னாலும் ஸேவார்த்திகள் கேட்காமல் எதையாவது பரிசளித்துவிட்டுப் போகிறார்கள். என்ன செய்வது?'' என்று கூறினார்.

இந்த பதிலைக் கேட்டு ஜகதீஷ்பாபா ஆனந்தம் அடைந்தார். இருவருமாக ஒரு யுக்தி செய்தார்கள். அடுத்த நாள் ஜடாதாரி பாபாவை அழைத்து ரஸகுல்லா, சந்தேஷ், திரட்டுப்பால் ஆகிய இனிப்புகளை வழங்கினர். ஜகதீஷ்பாபா பரிமாறினார். ப்ராணக்ருஷ்ணதாஸ் விசிறி வீசினார். ப்ரேம ஆலாபனை செய்து கொண்டே ஜகதீஷ்பாபா, ''மஹாராஜ்! என்னால் ஒரு அபராதம் நேர்ந்துவிட்டது. நீங்கள் கேட்ட உடனேயே உங்களுக்கு வாளி, டம்ளர், பணம் ஆகியவற்றைத் தராமல் விட்டுவிட்டேன். வ்யவஹாரத்தில் நான் முட்டாளாக இருக்கிறேன். என்னை மன்னிக்க வேண்டும்'' என்றார். இதற்குள் ப்ராணக்ருஷ்ணதாஸ் அந்தப் பொருள்களைக் கொண்டு வந்து ஜடாதாரி பாபாவுக்கு முன் வைத்தார்.

ஜகதீஷ்பாபா இரு கைகளையும் கூப்பிக்கொண்டு, ''மற்றுமோர் ப்ரார்த்தனை! நாங்கள் வயதில் பெரியவர்களானாலும் உங்களுக்குப் பிள்ளைகள் போன்றவர்கள். நீங்கள்தான் எங்கள் பிதா. உங்களது ரக்ஷணையால்தான் நாங்கள் இங்கு வாழ்ந்துகொண்டு பஜனை செய்கிறோம். நாங்கள் அடிக்கடி மாயைக்கு வசமாகி விடுகிறோம். நீங்கள் ஸாமர்த்தியமாக மாயையை வசப்படுத்தி உங்கள் கமண்டலத்தில் வைத்து விட்டு நிம்மதியாக உறங்குகிறீர்கள். எனவே, உங்களது கமண்டலத்தை இங்கு வைத்துவிடுங்கள். தர்சனார்த்திகள் அளிக்கும் காணிக்கைகளை இந்த கமண்டலத்தில் போடட்டும். நீங்கள் தினம் இரவு வந்து எடுத்துக்கொள்ளுங்கள். அப்படிச் செய்தால் எங்களுக்கும் மாயையின் ஸ்பர்சமே இராது. நீங்களும் எங்களை தண்டிக்க நேரிடாது'' என்று சொன்னார்.

ஜடாதாரி பாபாவிற்கு வெட்கமாகிவிட்டது. மௌனமாக அமர்ந்துகொண்டிருந்தார். பச்சாதாபத்தால் ஹ்ருதயத்தில் அக்னி மூண்டது. கண்ணீர் பெருக்கெடுத்தது. பொருள்களை ஏறெடுத்தும் பார்க்காமல் தன் குடிசையை நோக்கி தலைகுனிந்துகொண்டே சென்றார். இரவு முழுவதும் அவர் உறங்கவில்லை. அடுத்த நாளிலிருந்து அவர் நிரந்தரமாக இந்த இரு பாபாக்களுக்கும் உண்மையான ஸேவகனாகவும் ரக்ஷகனாகவும் வாழ ஆரம்பித்தார்.

(தொடரும்)

**– ஜயந்தி ஜானகிராமன்**

# ப்ரஹ்மோபதேசம்

**- ஸ்ரீ ஸ்வாமிகள்**

என்றும், எப்பொழுதும், எங்கும் பலமுள்ள மனிதன்தான் பிழைக்க முடியும். பலமுள்ள அசுரர்கள், தேவர்களை எப்பொழுதும் வதைத்துக்கொண்டே இருக்கின்றனர். தேவர்களுக்கும், அசுரர்களுக்கும் இடையே நடந்த சண்டையைப் பற்றி வேதம் அநேக இடங்களில் பேசுகிறது. பலமுள்ள நாடு பலமில்லாத நாட்டைக் கைப்பற்றி விடுகிறது. பலமுள்ள மிருகங்களுக்கு பயந்தே காட்டிலுள்ள பலமில்லாத மிருகங்கள் வாழ்கின்றன. ஒரே இனத்திலுள்ள மிருகங்களில் கூட அந்த இனத்தில் பலமுள்ள மிருகம்தான் பிழைக்கிறது. உதாரணத்திற்கு, நாம் வீதியில் சாதம் வைத்து, நாய்களைக் கூப்பிட்டோமானால் ஒரே நேரத்தில் பல நாய்கள் ஓடி வரும். அவற்றிலுள்ள, குண்டுநாய், மீதியுள்ள பலமற்ற மெலிந்த நாய்களைக் குரைத்து விரட்டிவிட்டு, சாதத்தை தான் மட்டும் உண்பதைக் காணமுடியும்.

நமக்கும், மற்றொருவருக்கும் ஏதோ ஒரு விஷயத்தில் அபிப்ராய பேதம் ஏற்படுகிறது அல்லது சொத்து விஷயத்தில் தகராறு ஏற்படுகிறது என்று வைத்துக் கொள்வோம். நம் பக்கம்தான் நியாயம் இருந்தாலும், எதிரி பலம் பொருந்தியவனாக இருக்கும் பக்ஷத்தில் அநேக ஸந்தர்ப்பங்களில் நாம் விட்டுக்கொடுத்துச் செல்வதுண்டு. இதுதான் உலக இயற்கை. ஆகவே, எவ்விதத்திலாவது நாம் பலத்தை ஸம்பாதித்துக்கொள்ளவேண்டும். அநேகமாக, நாம் சரீர பலத்தைத்தான் பலம் என்று நினைக்கிறோம். ஆகவேதான் நாம் ஒரு குழந்தை பிறந்தது முதல் அதற்கு உடற்பயிற்சிகளைக் கற்றுக் கொடுத்தும் பல்வேறு போஷாக்கான உணவுகளை அளித்தும் எவ்விதத்திலாவது அதை சரீரபலம் மிக்கவனாக்கும் பொருட்டு முயற்சிக்கின்றோம்.

சரீர பலத்தைக் காட்டிலும் புத்திபலம்தான் ஶ்ரேஷ்டம் என்பதை அநேகம்பேர் அறிவதில்லை. ஒருவன் சரீர பலமுடையவனாக இருந்தபோதிலும் கூட, புத்திபலம் இல்லாதவனாக இருந்தால், அவன் ஏமாந்துவிடுவதைக் காண்கின்றோம். பல நாடுகளைக்

கைப்பற்றிய அரசர்களிடம் சரீரபலம் மட்டுமன்றி, புத்திபலமும் கூடவே இருந்ததை நாம் சரித்திரங்களில் பார்க்கின்றோம். பராக்கிரமமுள்ள மிருகங்களாகிய யானை, புலி இவற்றைக் காட்டிலும், மனிதன் சரீர பலமில்லாதவனாக இருந்தபோதிலும் கூட, புத்தி பலத்தில் அவற்றைக் காட்டிலும் பெரியவனாக இருப்பதால் அவற்றைக் கைப்பற்றி மிருகக்காட்சி சாலையிலும், Circus-லும் வேலை வாங்கி விடுகிறான்.

புத்தி பலத்தைக் காட்டிலும், மனோபலம் ஶ்ரேஷ்டமானது. ஒரு குழந்தையின் சரீர பலத்தை அதிகரிப்பதற்காகவும், சரீரத்தை புஷ்டியாக ஆக்கவும் முயற்சிக்கும் பெற்றோர்கள், அதன் புத்திபலத்தை அதிகமாக்குவதற்கும் முயற்சிக்கின்றனர். அதற்காக, பள்ளிக்கூடங்களில் சேர்த்தும், பல வித்யைகளைக் கற்றுக் கொடுத்தும் குழந்தையை புத்திபலம் மிக்கவனாக்க முயற்சிக்கின்றனர். ஆனால், குழந்தையின் மனோபலத்தை வளர்க்க எந்த பெற்றோரும் முயற்சிப்பதில்லை. மனோபலத்தின் சக்தியை யாரும் அறிந்தவராக இல்லாததே இதற்குக் காரணம். ஹிப்னாடைஸ் செய்பவர்களும், மெஸ்மரைஸ் செய்பவர்களும் மனோபலத்தினாலேயே செய்கின்றனர். வெளிநாடுகளில் பலர் இந்த மனோபலத்தினால் ஆச்சர்யமான ஸாதனைகளை செய்து பலரை பிரமிக்கச் செய்கின்றனர்.

ஒரு பெரிய இரும்பு கம்பத்தை வளைத்துவிடுகின்றார்கள். ஒரு பழத்தின் ரஸத்தை மனோபலத்தினாலேயே உறிஞ்சி விடுகின்றார்கள். ஓடுகின்ற கடிகாரத்தை நிறுத்திவிடுகின்றார்கள். இதைப் போல இன்னும் எத்தனையோ. மனதின் ஒருமுகப்பட்ட பலம்தான் மனோபலம். ஆனால், இதற்கும் ஒரு அளவு உண்டு. இந்த மனோபலத்தைக் காட்டிலும் மிகவும் ஸ்ரேஷ்டமானது ஆத்மபலம். ஆத்ம தர்சனத்தினால் ஒருவருக்கு ஶாந்தியும், ஆனந்தமும் ஏற்படுவது மட்டும் அல்லாமல் எல்லையில்லாத சக்தியும் கூட கிடைக்கின்றது. இந்த உலகத்தைப் படைத்து காத்து அழித்து ஸம்ரக்ஷிக்கும் இறைவனுக்கு எத்தகைய சக்தி உள்ளதோ அத்தகைய சக்தி ஆத்மஞானிக்கும் உண்டு. ஆகவே, எல்லாவற்றைக் காட்டிலும் ஆத்மபலமே ஸர்வ ஶ்ரேஷ்டமானது.

மிகவும் பெரிய சைன்யத்துடன் வந்த விஸ்வாமித்திரருக்கும், அவருடைய சைன்யத்திற்கும், தனி ஒருவராக அமர்ந்திருந்த வசிஷ்டர் காமதேனுவைக்கொண்டு மிகப்பெரிய விருந்து அளித்தார். ''கேட்டதையெல்லாம் கேட்ட மாத்திரத்திலேயே கொடுக்கக்கூடிய காமதேனு தனி ஒருவராக அமர்ந்திருக்கும் வசிஷ்டருக்கு எதற்கு தேவை? நம்மிடம் இருந்தால் இந்த ராஜ்யத்திற்கே அல்லவா பயன்படும்'' என்று விஸ்வாமித்திரருக்கு தோன்றிற்று. வசிஷ்டர் காமதேனுவின் பெருமை, மஹிமை, அதனுடைய பவித்ரம் போன்றவற்றையெல்லாம் எடுத்துக் கூறி, விஸ்வாமித்ரர் கேட்பது நியாயமில்லை என்று கூறிய போதிலும், விஸ்வாமித்ரர் விடுவதாக இல்லை. வசிஷ்டர்மேல் போர் தொடுத்தார்.

தன்னுடைய அத்தனை படைபலமும் வசிஷ்டரின் ஆத்மபலத்தின் முன்பு செல்லாததைக் கண்டு ஆச்சரியமடைந்தார் விஸ்வாமித்ரர். உடனே, தன்னுடைய ராஜ்யத்தை அந்த க்ஷணமே துறந்து தவ வாழ்க்கையை மேற்கொண்டு ப்ரஹ்மரிஷி ஆனார். இந்த ஸம்பவம்தான் அவருடைய வாழ்க்கையில் மிகப்பெரிய மாற்றத்தை ஏற்படுத்தியது. ஆகவே, எந்த ரீதியிலாவது ஆத்மபலத்தைப் பெற வேண்டும். அதற்கு சுலபமான வைதீகமான நேர்வழி என்பதுதான் ப்ரஹ்மோபதேசம் என்பது.

ஒரு ப்ராஹ்மண சிறுவனுக்கு எப்பொழுது ப்ரஹ்மோபதேசம் ஆகின்றதோ அப்பொழுது அவனுக்கு த்விஜன் என்று பெயர். அந்த த்விஜனும் தனக்கு உபதேசமான காயத்ரீயை விடாமல் ஜபம் செய்தானானால் அவனிடம் ஒரு தேஜஸ் உண்டாகும். அப்பொழுது அவனுக்கு விப்ரன் என்று பெயர். அவன் வேத அத்யயனம் பூர்த்தி செய்வானாகில் அவனுக்கு வைதிகன் என்று பெயர். அவனே மேலும் சாஸ்திரம் படித்தால் அவனுக்கு சாஸ்திரி என்று பெயர். மேலும் அவனே அக்னிஹோத்ரம், யாகங்கள் செய்ய ஆரம்பித்தானாகில் அவனுக்கு ஸ்ரௌதி என்று பெயர். ஒரு மந்திரத்தை எடுத்து ஜபம் செய்து அதற்குரிய தேவதையை நேருக்கு நேர் தரிசனம் செய்தால், அவனுக்கு ரிஷி என்று பெயர். மனதை அடக்கி ப்ரஹ்மவிசாரம் செய்வானாகில் அவனுக்கு முனி என்று

பெயர். அவனுக்கே ப்ரஹ்மஸாக்ஷாத்காரம் ஏற்பட்டு விடுமாகில் அவனுக்கு ப்ராஹ்மணன் என்று பெயர்.

ஆகவே, ஒரு ப்ராஹ்மண குழந்தைக்குக் கிடைக்கக் கூடிய மிகப் பெரிய ஐஸ்வர்யமான காயத்ரீ உபதேசத்தை, 5 வயது முதல் 8 வயதுக்குள் செய்யாமல் போனால் அந்த குழந்தையின் பெற்றோர்கள் அந்தக் குழந்தைக்கு மிகப் பெரிய துரோகம் இழைத்தவர்களாகவே ஆகின்றார்கள். இதற்கு மிகவும் பெரிய செலவு ஆகாது. இது ஒன்றும் லௌகீகமான Function இல்லை. எதெல்லாம் அவச்யமோ அவற்றையெல்லாம் விட்டுவிட்டு அநாவச்யமான விஷயங்களைப் பிடித்துக்கொண்டுள்ளோம்.

ஒரு கல்யாணம் என்று எடுத்துக்கொண்டால், அந்தக் காலத்தில் சின்னக் குழந்தைகளுக்கு விவாஹம் செய்ததால் ஏற்படுத்திய ஜானவாஸம், மற்றும் வெளியூரிலிருந்து வந்து விவாஹம் செய்வதாலும், வெளியில் சாப்பிடாதவர்களாக இருப்பதாலும் ஏற்படுத்திய கட்டுசாதக்கூடை, மற்றும் வரசட்சணை போன்றவைகளை எல்லாம் இன்றும் பிடித்துக் கொண்டுள்ளோம். ஆனால், அவச்யமான மந்திரபாகங்களிலோ ஔபாஸன க்ரியைகள் பற்றியோ நமக்கு லட்சியமில்லை. இன்று இந்த மாதிரி வைதீக ஸம்ஸ்காரங்கள் எல்லாம் தன்னுடைய Status-ஐ காண்பிக்கக் கூடிய ஒரு Social Function ஆக ஆகிவிட்டதை காண்கின்றோம்.

ஒரு குழந்தைக்கு காலகாலத்தில் உபநயனம் செய்து வைப்பதனால், பெற்றோர்களுக்கு ஆயுள் வளரும். அந்தக் குழந்தைக்கு ஆயுள் வளரும். காம சிந்தனை வருவதற்கு முன் ஒரு குழந்தைக்கு காயத்ரீ உபதேசம் செய்து விட வேண்டும். காயத்ரீ உபதேசம் என்பது ப்ராஹ்மணனுக்கு விசேஷமாக விதிக்கப்பட்டது. ராமர் ராவணனை வதம் பண்ணியதும், க்ருஷ்ணன் ஜகத்பூஜ்யன் ஆனதும், விஶ்வாமித்ரர் த்ரிசங்கிற்காக ஒரு சொர்க்கத்தையே உண்டு பண்ணியதும், அகஸ்தியர் கடலையே குடித்ததும், காயத்ரியின் ப்ரபாவத்தினாலேயே ஆகும்.

# ஸ்ரீ ஸ்வாமிகளின் ஸம்பாஷணைகளிலிருந்து - 81

*''ஞானமில்லாது உன் ஆசையால் தளர்வற*
*ஞானந் தெரித்தருள் அருணாசலா* (தொடர்ச்சி)

தெய்வத்தை உபாஸனை செய்பவர்கள் ஸங்க சக்ர கதாதரனாக விஷ்ணுவையோ, ருத்ராக்ஷமாலாபரணாக சிவனையோ, புஷ்பபாணங்களை வைத்துக்கொண்டிருக்கும் தேவியையோ பூஜை செய்துகொண்டிருப்பர். இப்படி இவர்கள் பூஜை செய்யும் ஸ்வாமி அந்த உபாஸகருடன் பேசும். உபாஸகர்கள் பகவானுடன் பேசுவது '**பா**வ' பக்தியினால் ஸாத்யமாகிறது.

பகவானுக்கு தாஸனாகவோ, பகவானை தனது தோழனாகவோ, பகவானை தனது நாயகனாகவோ, பகவானை தனது குழந்தையாகவோ **பா**வித்து பக்தி செய்ய வேண்டும். இதற்கு '**பா**வுக பக்தி' என்று பெயர்.

அப்படி பக்தி செய்து வரும் காலத்தில் பக்தன் தான் பூஜை செய்து வரும் அர்ச்சாவதாரத்தில் ஸ்வாமி நிஜமாக வாஸம் செய்கிறார் என்று திடவிஶ்வாஸத்துடன் இருப்பான். இந்த ஸ்வாமி நித்யம் இங்கு வாஸம் செய்கிறார், மூச்சு விடுகிறார், சாப்பிடுகிறார், தூங்குகிறார், நடக்கிறார் என்று தனது **பா**வபக்தியினால் திடமாக பக்தன் நம்புவதால் அந்த ஸ்வாமியும் பக்தனிடம் பேச ஆரம்பித்து விடுகிறார்.

இந்த உயர்ந்த '**பா**வ' பக்தியானது பலகாலம் தொடர்ந்து அப்யாஸம் செய்த பின்னே ஸாத்யமாகிறது. நாமதேவர் என்றொரு மஹாத்மா பண்டரிபுரத்தில் வாழ்ந்து வந்தார். அவர் கோவிலுக்குச் சென்ற முதல் நாளே பாண்டுரங்கன் பேச ஆரம்பித்துவிட்டான். ஸமீபத்தில் வங்காளதேசத்தில் வாழ்ந்து வந்த ஸ்ரீராமக்ருஷ்ண பரமஹம்ஸர் காளியைப் பார்க்க ஆசைப்பட்டவுடன், காளி பேசினாள் என்று இருக்கிறது. இதுபோல், இதர பக்தர்களின் விஷயத்தில் நடக்காது. காரணம் நாமதேவர், ராமக்ருஷ்ண பரமஹம்ஸர் போன்றோர் மஹாத்மாக்கள். ஆதலால், அவர்கள்

ஆலயத்துக்குச் செல்லும் முதல்நாளே, பலகாலம் அப்யாஸம் செய்து வந்தால் கிடைக்கும் **பா**வபக்தியையும், பகவான் அர்ச்சாவதாரத்தில் நிச்சயம் உள்ளான் எனும் திடவிஶ்வாஸத்தையும் பெற்றிருந்தனர். அதனாலேதான், பகவானும் மஹாத்மாக்களுக்கு சுலபனாய் உள்ளான்.

ஞானத்தை அப்யாஸம் செய்பவர்களின் நிலையும் இப்படித்தான் இருக்கிறது. பலர் வருஷக்கணக்கில் ஆத்மவிசாரம் அப்யாஸம் செய்து வருகின்றனர். அவர்களுக்கு ஒன்றும் சித்திப்பதில்லை. ஆனால், சிலருக்கு சிறிது அப்யாஸம் செய்த உடனேயே, சித்தித்து விடுகிறது. மஹான்களான ஞானிகளுக்கு தீவிரமான 'முமுக்ஷுத்வம்' இருப்பதே இதற்குக் காரணம்.

சித்தபுருஷர்கள் தினம் காலையில் சூரிய வெளிச்சத்தில் வந்து நிற்பர். அப்படி நின்றுகொண்டு, தங்களது நிழலை பார்த்துக் கொண்டே இருப்பர். அந்த நிழலுடன் பேசி, பேசிப் பழக்கப்படுத்திக் கொண்டு வருவர். ஒரு பத்து வருடம் கழித்து அந்த நிழலானது, சித்த புருஷர்களிடம் பேச ஆரம்பித்து விடும். இதற்கு 'சாயாபுருஷ தரிசனம்' என்று பெயர். சித்தர்கள் தங்களுடைய நிழலையே பார்த்துப் பார்த்து, அது ஜீவிப்பதாக **பா**வித்து வருவதால், அந்த நிழலுக்கு ப்ராணன் வந்து விடுகிறது. அதுபோல்தான், கோவிலில் உள்ள ஸ்வாமியும் '**பா**வுக பக்தியினால்' உபாஸகர்களிடமும், பக்தர்களிடமும் பேசுகிறார்.

இப்படி உபாஸகர்களாக உள்ளவர்களுக்கு ஜீவன் முக்தி கைகூடாவிடில் அந்தந்த ஸ்வாமியை பூஜை செய்பவர்கள், அந்தந்த ஸ்வாமியின் லோகத்தை அடைவர். அப்படிப் போகும்போது ப்ராணன் அவர்களுக்கு தலையில் ஒரு ஓட்டை போட்டுக்கொண்டு போகும். இந்த லோகமெல்லாம் எங்குள்ளது என்றால் ஹிரண்யகர்ப்பனின் வயிற்றில்தான். உபாஸகர்கள் ஹிரண்யகர்ப்ப லோகத்தில் ப்ரளயம் வரையில் இருப்பர். ப்ரளயத்திற்கு பின், மீண்டும் பூமிக்கு வருவர்.

ஜீவன்முக்தி அடையும் ஞானிகளின் விஷயம் இப்படி இல்லை.

(தொடரும்)

# செய்திகள்

## மே 26-ந் தேதி–வைகாசி அனுஷம்–ஸ்ரீ மஹாபெரியவாள் ஜயந்தி

நம் மிஷன் சார்பில் ஸ்ரீ மஹாபெரியவாள் ஜயந்தி மஹோத்ஸவம் மதுரபுரி ஆஶ்ரமத்தில் நடைபெற்றது.

ஆவஹந்தி ஹோமம், ஆயுஷ்ய ஹோமம், நக்ஷத்ர ஹோமம், ஸ்ரீஸூக்த ஹோமம், நவக்ரஹ ஹோமம் நடைபெற்றது. ஸ்ரீ ஸ்வாமிகள், ஸ்ரீ மஹாபெரியவாள் பாதுகைக்கு கலச தீர்த்தத்தை ஸஹஸ்ரதாரையினால் அபிஷேகம் செய்தார்கள். ஸ்ரீ மஹாபெரியவாள் பாதுகைக்கு ருத்ரதிரிசதி அர்ச்சனையும், அஷ்டோத்ர அர்ச்சனையும் செய்யப்பட்டது.

ப்ரஹ்மஸ்ரீ மல்லிகார்ஜுன ஸோமயாஜி அவர்கள் கனபாராயணம் செய்தார்கள். பக்தர்களுக்கு ப்ரசாதம் விநியோகிக்கப்பட்டது. அன்னதானம் செய்யப்பட்டது. மதியம் 3 மணியளவில் தேவாரம் பாடல்கள் பாடப்பட்டது. மாலை 4½ மணியளவில் ப்ரஹ்மஸ்ரீ ஏகாம்ரம் அவர்கள் ஸ்ரீ மஹாபெரியவாளைப் பற்றி பேசினார்கள்.

மாலை 6½ மணியளவில் ஸ்ரீ மஹாபெரியவாள் படங்களை நன்கு அலங்காரம் செய்து ப்ரஹ்மஸ்ரீ மல்லிகார்ஜுன ஸோமயாஜி அவர்களும் ப்ரஹ்மஸ்ரீ ஏகாம்ரம் அவர்களும் ஸ்ரீ ஸ்வாமிகளின் முன்னிலையில் புறப்பாடு செய்ய, வெள்ளிக்குடை, சத்ரம், சாமரம், முதலிய உபசாரங்களுடன் பாடசாலை வித்யார்த்திகள் உபநிஷத் பாராயணம் செய்ய சந்த்ரோதயத்தில், பக்தர்கள் குதூஹலமாக ''ஜய ஜய சங்கர, ஹர ஹர சங்கர'' நாமாவளி பாட, புறப்பாடு மிக இனிதாக நடைபெற்றது.

## மே 13-ந் தேதி முதல் மே 17-ந் தேதி வரை

சென்னை கோடம்பாக்கம், சுப்ரமணிய நகர் ஸ்ரீ சங்கர ஜயந்தி மஹோத்ஸவ சபா சார்பில் ஸ்ரீ ஸ்வாமிகள் தினம் இரவு 7 மணி முதல் 9 மணி வரை மஹான்களின் சரித்ரங்களைப் பற்றி உபன்யாஸம் செய்தார்கள்.

### மே 17-ந் தேதி முதல் மே 26-ந் தேதி வரை

மாதுரிஸகீ ஸமேத ஸ்ரீ ப்ரேமிகவரதனின் வஸந்தோத்ஸவம் நடைபெற்றது.

### மே 23-ந் தேதி

ஸ்ரீ ஸ்வாமிகள், குத்தாலம் அருகிலுள்ள பழையகூடலூரில் ஸ்ரீ G.K.R. சாரிடீஸ் மும்பை, சென்னை சார்பில் நடத்தும் ஸ்ரீ அப்பய்ய தீக்ஷிதர் வேதசிவாகம பாடசாலையை துவக்கி வைத்தார்கள்.

### மே 27, 28 தேதிகள்

சென்னை, மேலமாம்பலம், ஸ்ரீ அயோத்யா அஶ்வமேத மண்டபத்தில், ஸ்ரீ சந்த்ரசேகரேந்த்ர ஸரஸ்வதி பக்த ஜன ட்ரஸ்ட் சார்பில் நடைபெற்ற மஹாபெரியவாளின் 109வது ஜயந்தி மஹோத்ஸவத்தில் ஸ்ரீ ஸ்வாமிகள் கலந்துகொண்டார்கள்.

---

ஸ்ரீ ஹரி:

## மதுரமுரளி வருட சந்தா 2002-2003

''மதுரமுரளி'' தெய்வீக மாதப்பத்திரிகை ஆரம்பித்து ஜூன் 2002-ல் ஏழு வருடங்கள் பூர்த்தியாகின்றது. சந்தாதாரர்கள், ''மதுரமுரளி'' 2002-2003க்கான சந்தாவை ''குருஜி ஸ்ரீ முரளீதர ஸ்வாமிகள் மிஷன்'' என்னும் பெயரில் மட்டுமே, ரொக்கம் / M.O. / DD யாக தங்கள் பெயர், முகவரி, சந்தா எண். தொலைபேசி எண். உள்ளிட்ட விவரங்களுடன் மிஷன் முகவரிக்கு உடனே அனுப்பி வைக்க வேண்டுகிறோம். தயவுசெய்து காசோலையாக சந்தாவை அனுப்ப வேண்டாம்.

உள்நாடு : ஆண்டு சந்தா ரூ. 60/-
மூன்றாண்டு சந்தா ரூ. 180/-
ஆயுள் சந்தா ரூ. 750/-

வெளிநாடு : ஆண்டு சந்தா ரூ. 300/-

மங்களானி பவந்து

# மதுரமுரளி

Registered as Newspaper in India R. No. 62828 / 95

Regd. No. TN / Chief PMG / 156 / 2002

Licensed to Post without prepayment WPP No. 52 / 2002

வேணு : 7 ஜூன் 2002 கானம் : 11




மாதுரிஸகி ஸமேத ஸ்ரீப்ரேமிக வரதனின்
வஸந்தோத்ஸவம்


Published by V. Sankaran on behalf of Guruji Sri Muralidhara Swamigal Mission, 24, Netaji Nagar, Jafferkhanpet, Chennai - 600 083. and Printed by Mrs. Sri. Kalaivani of Sri Maruthy Laser Printers, 200 (173), Peters Road, Chennai - 600 014. ✆ : 8522656 / 8524256 Editor : S. Sridhar. Visit us at www.madhuramurali.org e-mail : Contact@Madhuramurali.org